மெட்ரிக் டன்னிலிருந்து 20 இலட்சத்து 58 ஆயிரம் மெட்ரிக் டன்னாக உயர்ந்துள்ளது என்பதை இந்த அவையிலே பதிவு செய்ய விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 10-35

இது சேமிப்புக் கிடங்குகள் வரலாற்றில் ஒரு மைல் கல் என்பதனையும் இங்கே குறிப்பிட விரும்புகின்றேன். அதுமட்டுமல்ல, இதற்காக மத்திய அரசின் முதல் மூன்று பரிசுகளையும், இரண்டு சிறப்புப் பரிசுகளையும் கடந்த ஆண்டு தமிழக அரசு பெற்றிருக்கிறது என்பதனையும் இந்த அவையிலே குறிப்பிட விரும்புகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தினுடைய பொருள்களை மூன்று மாதங்களுக்கு முன்னதாக இருப்பு வைக்கவேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டார்கள். மூன்று மாதங்களுக்குத் தேவையான பொருட்களை வைப்பதற்குத் தேவையான இடம் செங்கை மாவட்டத்திலே முழுமையாக இருக்கின்றது. திருப்புவனம் போன்று புதியதாகப் பிரிக்கப்பட்ட தாலுகா எதுவாக இருந்தாலும், அந்த இடத்திற்குப் புதியதாக சேமிப்புக் கிடங்கு அமைத்துத் தரப்பட வேண்டும் என்று மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உத்தரவிட்டிருக்கின்றார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டிருக்கின்ற திருப்புவனம் தாலுகாவில் புதிய சேமிப்புக் கிடங்கு அமைப்பதற்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அனுமதியைப் பெற்று அமைத்துத் தரப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 125, மாண்புமிகு உறுப்பினர் திரு. க. தினகரன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

125—

பேருந்து வசதி

***34382—திரு. க. தினகரன்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூரிலிருந்து பணப்பட்டிக்கு பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், கோவை சார்பாக திருப்பூர்-பொள்ளாச்சிக்கு பல்லடம், கள்தான்பேட்டை, பணப்பட்டி வழியாக மூன்று பேருந்துகள்மூலம் தினசரி 5 நடைகள் இயக்கப்பட்டு வருகின்றன. மேற்படி வழித்தடங்களில் பயணிகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப 3 பேருந்துகளும் சிறப்பாக இயங்கிக்கொண்டிருக்கின்றன. பயணிகளுடைய எண்ணிக்கை அதிகரிக்கின்றபோது, அதற்கேற்ப கூடுதல் பேருந்துகள் இயக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. க. தினகரன் அவர்கள்.*

திரு. க. தினகரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கள்தான்பேட்டை, வாரப்பட்டி, சந்திராபுரம், வேலப்பநாயக்கன்பாளையம், அக்கநாயக்கன்பாளையம், வடவள்ளி, பணப்பட்டி ஆகிய ஊர்களில் உள்ள அடிமட்டத்திலுள்ள ஏழை மக்கள் தொழில் நகரமான திருப்பூருக்கு வேலைக்குச் சென்று வருகின்றார்கள். அந்த மக்களின் நலன் கருதி இந்தக் கிராமங்கள் வாயிலாக ஒரு பேருந்தை இயக்கினால் சிறப்பாக இருக்கும் என்று கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பூரிலிருந்து பணப்பட்டிக்கு ஏற்கனவே மூன்று பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன. அந்த மூன்று பேருந்துகளில் இரண்டு பேருந்துகள் மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்கால ஆட்சியில் அம்மா அவர்களுடைய திருக்கரங்களால் இயக்கி*

வைக்கப்பட்டிருக்கின்றன. (மேசையைத் தட்டும் ஒலி) அவற்றின் எண்ணிக்கை, நடைகள், அங்கே இருக்கின்ற பயணிகளுடைய பயணத்திற்கு ஏற்ப தற்போது சரியாக இருக்கின்றன. பயணிகளுடைய எண்ணிக்கை அதிகரிக்கின்றபோது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டுகின்ற திருப்பூர்-பனப்பட்டிக்கு கூடுதல் பேருந்துகள் இயக்குவதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுடைய உத்தரவைப் பெற்று நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. க. தினகரன் அவர்கள்.*

திரு. க. தினகரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உடுமலைப்பேட்டையிலிருந்து சாலைப்புதூர், வலசுப்பாளையம், நந்திபுரம், பச்சாகவுண்டன்பாளையம் பிரிவு, செஞ்சேரிமலை, செஞ்சேரி பிரிவு, கல்தான்பேட்டை வரை பேருந்து இல்லாததால் அந்த கிராம மக்கள் மிகவும் சிரமப்படுகின்றார்கள். மேலும், செஞ்சேரி மலையிலிருந்து செஞ்சேரி, செஞ்சேரி பிரிவு, கல்தான்பேட்டை, வாரப்பட்டி, சந்திராபுரம், புலியமரத்துப்பாளையம் ஆகிய பகுதிகளில் இருக்கின்ற மாணவர்கள் செல்க்கரிச்சல் பஞ்சாயத்தில் இருக்கின்ற இலக்ஷ்மிநாயக்கன்பாளையம் மேல்நிலைப்பள்ளிக்குச் சென்று வருகின்றார்கள். அங்கு சென்றுவர பள்ளி நேரத்திற்கு சரியான பஸ் வசதி இல்லாததால் மாணவர்கள் தனியார் பேருந்துகளில் நின்றுகொண்டும், தொங்கிக்கொண்டும் செல்கின்றார்கள். மேலும் காந்திபுரத்திலிருந்து என் தொகுதிக்கு உட்பட்ட பச்சாபாளையம் பஞ்சாயத்து பெரியகுயில் வழியாக அவர்களுக்காக ஏற்கெனவே தடம் எண் 73 காலையிலும், இரவிலும் இயங்கி வருகின்றது. ஆனால் செட்டிப்பாளையம் கிராமத்திலிருந்து பெரியகுயிலுக்கு மாலை 4 மணிக்கு பஸ் வராததால், மாணவர்கள், லாரிகள்மூலம் வருகின்றார்கள். ஆகவே இந்த தடம் எண் 73 பேருந்தை 4-30 மணி அளவில் செட்டிப்பாளையத்திலிருந்து பெரியகுயிலுக்கு இயக்கினால் மிகவும் வசதியாக இருக்கும்.*

மேலும் ஒரு கேள்வி. எனது தொகுதிக்குட்பட்டு கருமத்தம்பட்டி பேரூராட்சி இருக்கின்றது. அங்கு 6 வழிச்சாலை இருப்பதால், பேருந்துகள் நிற்பதற்கு இடமில்லாததால் மக்கள் மிகவும்

சிரமப்படுவதால், ஒரு பேருந்து நிலையத்தை கருமத்தம்பட்டியிலே அமைத்துக் கொடுத்தால், போக்குவரத்து நெரிசல் குறையும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். இறுதியாக, சூலூர் தொகுதியில் மாணவர்கள் சென்று வருவதற்கு ஏதுவாக இரண்டு வேளையிலும் போக்குவரத்தைச் சீரமைத்துக் கொடுத்தால், ஏழை மாணவர்கள் நன்றாகப் படிக்க ஏதுவாக இருக்கும் என்று கேட்டுக்கொள்கிறேன். எனவே இதனை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சீரமைத்துத்தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

முற்பகல் 10-40

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அனைத்துப் பகுதிகளிலுமுள்ள ஏழை எளிய மக்கள் சிறப்பான பேருந்து வசதிகளைப் பெறவேண்டும், பள்ளிக்குச் செல்கின்ற மாணவ மாணவிகள் சரியான நேரத்திற்கு பள்ளிக்குச் செல்ல வேண்டுமென்ற சீரிய நோக்கத்தோடு, இந்த மூன்று ஆண்டுகளில் மட்டும் (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அம்மாவினுடைய திருக்கரங்களால் கொடியசைத்து, 1,436 புதிய வழித்தடங்களில் பேருந்துகள் இயக்கப்பட்டு இன்று மக்களுடைய பயன்பாட்டில் அவை இயங்கி வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய சட்டமன்றத் தொகுதியில் இரண்டு புதிய வழித்தடங்களை மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் வழங்கி, அந்தப் பேருந்துகளும் இன்று மக்களுடைய பயன்பாட்டில் உள்ளன. மேலும், எதிர்க்கட்சி சட்டமன்ற உறுப்பினர் என்றுகூட பாராமல் மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள், மாண்புமிகு உறுப்பினருடைய சூலூர் சட்டமன்றத் தொகுதியில் வட்டாரப் போக்குவரத்துப் பகுதி அலுவலகத்தை தனது திருக்கரங்களால் 20-6-2013 அன்று காணொலிக் காட்சிமூலமாகத் தொடங்கி வைத்து, அந்தப் பகுதி மக்களுடைய தேவைகளைப் பூர்த்தி செய்திருக்கின்றார்கள். இப்படி தேவையான பேருந்துகள் மக்களுடைய பயன்பாட்டிற்கு, மாணவ மாணவிகளுடைய பயன்பாட்டிற்கு முழுமையாக இயக்கப்பட்டு வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வழித்தடங்களைப் பற்றி சுட்டிக்காட்டியிருக்கின்றார்கள். அதுபற்றி ஆய்வு செய்து, தேவை ஏற்படின் மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுடைய உத்தரவைப் பெற்று நடவடிக்கை எடுக்கப்படும்*

என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 126, மாண்புமிகு உறுப்பினர் திரு. க. அன்பழகன், மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

126—

பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கம்

***42332—திரு. க. அன்பழகன்:**

மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கத்தினை விரிவாக்கம் செய்ய அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. வி. மூர்த்தி, பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் அம்மா அவர்களின் பொற்பாதம் பணிந்து வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கத்தில் நாளொன்றுக்கு 7,800 லிட்டர் பால் கொள்முதல் செய்து, 5,300 லிட்டர் பால் உள்ளூர் விற்பனை போக, 2,500 லிட்டர் பால் தஞ்சாவூர் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்திற்கு அனுப்பப்பட்டு வருகிறது. சங்கத்தின் பால் உற்பத்தி மற்றும் விற்பனையைப் பெருக்கி, சங்கத்தின் பணியை மேலும் விரிவாக்கம் செய்ய அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கின்றேன்.